# சித்தர்கள் திருவடி

## செய்தி மலர்

வெளியீடு : 06/2024 ஜூன் 01-15

www.siddhargalthiruvadi.com



கட்டிகுளம் ஸ்ரீ மாயாண்டி சித்தர்

### ஜூன் மாத குருபூஜை தகவல்கள்

### வெள்ளியங்கிரி மலைப் பயணம்



பைரவ சித்தர்
வாழ்க்கை சரிதம் - 4




வாழும் சித்தர்
ஒத்த ரூபா சித்தர்

# Siddhargal Thiruvadi e-Newsletter

"SERVICE TO SOUL IS SERVICE TO GOD"

*(This is a spiritual bi-monthly private circulation, not for sale and completely free of cost )*

**Issue : 06 : 2024**
**JUNE 01-15, 2024**

Regd. No. 117/2023 under Indian Trusts Act, 1882, Indian Income Tax Act, 1977 And NGO Darpan No. TN/2023/037227

24-A, 1st Main Road, tropical avenue, vedhachalam st, ragavendhra nagar,

இந்த இதழில்...


- எனது பயணம்
- சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர்
- வாழும் சித்தர்
  ஒத்த ரூபா சித்தர்
- பாடகச்சேரி சுவாமிகள் - பாகம் 4
- ஜூன் (01-15) மாத குருபூஜை தகவல்கள்
- அன்னதான நன்கொடையாளர்கள்
- சித்தர் பாடல்கள்
- தகவல் பலகை


Editor
Siddhargal Thiruvadi "Gunnu"
Co-Editor
S. SuryaNarayanan
Contact Mobile
+91 8438238921
E-mail
siddhargalthiruvadisevatrust@gmail.com
Website
www.siddhargalthiruvadi.com



## எனது பயணம்...

அனைவருக்கும் இனிய வணக்கங்கள்...

முதற்கண் இந்த செய்தி மலரின் தாமதத்திற்கு மிகவும் வருந்துகிறேன். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு நான் ஒரு அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிறகு தொடர்ந்து அலுவலக பணிச்சுமை வேறு. வலைக்காட்சிக்கு காணொளி தயாரிப்பது, அறக்கட்டளைக்காக அன்னதானம் வழங்குவது, இணையதளத்தினை மேம்படுத்துதல் செய்வது, அறக்கட்டளைக்கு இடம் தேர்வு செய்வது, அறக்கட்டளைக்கு வருமான வரிவிலக்கு வாங்குவதற்கான ஏற்பாடுகள் என பல பணிச்சுமைகளால் தான் இந்த தாமதம். இனி தாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறேன்.


எந்த ஒரு இலக்கையும் நாம் அவ்வளவு எளிதில் அடைய முடியாது என்பதனை என்னுடைய அனுபவத்தின் மூலமாகவே உணர்கிறேன். சித்தர்கள் திருவடி ஆன்மீக வலைக்காட்சியில் சுமார் 1700க்கும் மேற்பட்ட காணொளிகளை 300 க்கும் மேற்பட்ட சித்த பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை, ஜீவபீட தரிசனத்தை எந்தஒரு கிராபிக்ஸ் கலப்படம் இல்லாமல் உண்மையை உண்மையாக கொடுத்தோமானால் அதனை 300 பேர்களுக்கு மேல் பார்ப்பதில்லை. கலப்படம் செய்து உண்மைக்கு புறம்பாக "அதிசயம்" "ஆச்சர்யம்" "அமானுஷ்யம்" என்ற வார்த்தைகளை பயன்படுத்தினால் மட்டுமே பார்வையாளர்கள் கூடிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நான்கு வருடத்தில் 1 லட்சம் சந்தாதாரர்களை கூட என்னால் அடைய முடியவில்லை இந்நாள் வரை வெறும் 38 ஆயிரத்தை மட்டுமே தொட்டு இருக்கிறேன்.

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் மூலம் மிகப் பெரிய சாதனையை செய்துவிடவேண்டும் என்ற மிகப் பெரிய கனவோடு ஆரம்பித்தேன், அதில் சில பேர்களை தவிர தொடர்ந்து இணைந்து பணியாற்ற யாரும் விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்த அறக்கட்டளையில் குறைந்தது 1000 பேர்களாவது இணைக்க வேண்டும் என்பது இலக்கு அதனை இந்த வருடத்திதிற்குள் நாம் எப்படியேனும் அடைந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் நடை போட்டுக்கொண்டிருக்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்...

அன்புடன் உங்கள்,
சித்தர்கள் திருவடி "குன்னு"

## கட்டிக்குளம் சூட்டுக்கோல் தவத்திரு மாயாண்டி சுவாமிகள்



மனிதனுக்கு துன்பங்கள் தீரும் வழிகள் ததினந்தோறும் இறைவனை வழிபடுவது, அதே போன்று ஜீவசமாதி கொண்டுள்ள சித்தர்கள் வழிபாடும் உதவியாக இருக்கும் என்பதும் உண்மையே! மனக்குறை நீங்கவும், மகிழ்ச்சிகள் பொங்கவும் மனஅமைதி இல்லத்தில் தங்கவும் சித்தர்கள் வழிபாடு மிக உதவியாக இருக்கும்.

மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் இருக்கும் திருப்பாச்சேத்தியில் இருந்து தெற்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, கட்டிக்குளம். அங்கு குப்பமுத்து வேளாளர், சூத்தாயி அம்மாள் ஆகியோரின் மகனாக காளயுக்தி வருடம் ஆடி மாதம் பூராட நட்சத்திரத்தில் (1858 ஜூலையில்) மாயாண்டி சுவாமிகள் அவதரித்தார். சிறு வயது முதலே ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

கட்டிக்குளத்தில் உள்ள அய்யனார் கோயிலின் பூசாரியாக இருந்த குப்பமுத்து வேளாளர், ஒரு நாள் தம் மகன் மாயாண்டியையும் பூசை செய்வதற்காக அழைத்துச் சென்றார். வெளிக்கூடத்தில் மகனை உட்கார வைத்து விட்டு உள்ளே சென்று பூசைகளைச் செய்து விட்டுத் திரும்பியவர் அதிர்ச்சியடைந்தார்.

குத்துக்காலிட்டுத் தியானத்தில் அமர்ந்திருந்த சிறுவன் மாயாண்டியின் தலைக்கு மேலே நல்ல பாம்பு ஒன்று படமெடுத்து ஆடாமல் அசையாமல் இருந்தது. அதன் உடற் பகுதியும் வால் பகுதியும் சிறுவனின் உடலைச் சுற்றி இருந்தன. கடும் விஷம் உள்ள நாகம் மகனைக் கொத்திவிடப் போகிறதோ என்கிற பீதியில், ஐயனாரப்பா எம் மகனைக் காப்பாத்து என்று கருவறையை நோக்கி ஓங்கிக் குரல் கொடுத்தார் குப்பமுத்து. பிஞ்சு மகனைப் பார்க்க வாஞ்சையுடனும் பயத்துடனும் திரும்பினார். என்ன அதிசயம்! நாகத்தைக் காணோம். தியானத்தில் இருந்து அப்போதுதான் மீண்டிருந்தான் மாயாண்டி. மகனிடம் ஏதோ ஓர் அபூர்வ சக்தி இருக்கிறது என்பதை அப்போது உணர்ந்து கொண்ட குப்பமுத்து, அவனை அப்படியே வாரி அணைத்துக் கொண்டார். இதே போன்ற சம்பவங்கள் பின்வந்த நாட்களிலும் தொடர்ந்தன. ஒரு கட்டத்தில் விஷயம் ஊருக்குள் பரவி, மாயாண்டியை ஒரு தெய்வ சக்தியாகவே அனைவரும் பார்க்க ஆரம்பித்தனர்.

சிறு வயதில் மாயாண்டி சுவாமிகள், சித்தர் பாடல்களைத் தேடித் தேடிப் படிப்பதையும் அடிக்கடி ஆலய யாத்திரைகள் சென்று வருவதையும் கண்டு அச்சமுற்ற பெற்றோர் அவருக்குத் திருமணமும் செய்து வைத்தனர். இருப்பினும் அவரது ஆன்மிகத் தேடல் குறையவில்லை. அவர் தமது தேடல்களுக்குச் சரியான வழிகாட்டும் குரு ஒருவரைத் தேடியலைந்தார். இறைவன் அதற்கும் வழிகாட்டினான்.

மாயாண்டி சுவாமிகளை இறைவன் எந்தப் பணிக்காக அனுப்பி இருக்கிறான் என்பது, அவனுக்கு மட்டும்தானே தெரியும்! இல்லறத்திலேயே இவன் இருந்து விட்டால், எதிர்கால சமுதாயத்துக்கு என்ன பயனைச் செய்து விட முடியும்? மாயாண்டியை இறைவன் ஆட்கொண்டான். விளைவு, இல்லறம் இனிக்கவில்லை. தவத்திலும் யோகத்திலும் காலத்தை ஓட்டினார். சிட்டாய்ப் பறக்க விரும்பினார். தவத்திலும், சமாதி நிலையிலும் உடல் கூட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு முன் தீட்சை பெற வேண்டுமே! உபதேசம் செய்வதற்கு ஒரு குரு வேண்டுமே! இந்த வேளையில் தான் ராமேஸ்வரத்துக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த தஞ்சாக்கூர் செல்லப்ப சுவாமிகள் என்பவர், கட்டிக்குளம் வந்தார்.

அவரைச் சந்தித்த மாயாண்டி சுவாமிகள், அவரிடம் தம் விருப்பத்தைக் கூறியதும் உடனே அவருக்குத் தீட்சையளித்தார். அந்த நிமிடமே அனைத்தையும் துறந்த மாயாண்டி சுவாமிகள், கட்டிய கோவணத்துடன் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

பல புனித ஸ்தலங்களுக்குச் சென்று யோக சமாதியில் ஆழ்ந்த அவர் இறுதியாகத் திருக்கூடல் மலை என்ற காகபுஜண்டர் மலைக்கு வந்து சேர்ந்தார்.(இன்றைக்கும் காகபுஜண்டர் அந்த மலையில் யோக சாமதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது). அந்த மலையில் அரூபமாக இருக்கும் சித்தர்கள் அவரை வரவேற்று, இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடும் படி அருளாசி கூறினர். அதன்படி மாயாண்டி சுவாமிகள் அங்கிருக்கும் குகை ஒன்றில் லிங்கம் ஒன்றைப் பிரிதிஷ்டை செய்து, யோக சமாதியில் ஆழ்ந்து அட்டமாசித்திகளையும் பெற்றார்.

மாயாண்டி சுவாமிகளின் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள் எண்ணற்றவை.

ஒரு நாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத்தில் வசித்த பிராமண தம்பதியினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், “உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப் போகிறது. அதற்குச் சுப்பிரமணி என்று பெயர் வைக்கவும். ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப்பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்” என்று ஆசி வழங்கினார்.

அதன் படி பிறந்த சுப்பிரமணி தான் பின்னர் சுவாமிகளிடம் தீட்சை பெற்று ‘சாந்தானந்த சுவாமிகள்’ ஆனார். சேலம், புதுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள ‘ஸ்கந்தாஸ்ரமம்’ கோவில்கள் அமைத்துப் பக்தர்களின் குறைகளைத் தீர்த்தார்.

ஒரு முறை சுவாமிகள் நாகப்பட்டினம் சென்றிருந்தார். சுவாமிகளைத் தரிசித்துத் திருநீறு பெறுவதற்காகப் பெரும் கூட்டம் கூடியிருந்தது . அப்போது ஒரு சிறுவன் திருநீறு வாங்குவதற்காக நீட்டிய கையைத் தொட்டதும் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் “நீ யோகக்காரனப்பா! உன் பேச்சைக் கேட்கப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள். அதனைக் கொண்டு ஏராளமான ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்யும் யோகமும் உனக்கு இருக்கிறது” என்று கூறி அந்தச் சிறுவன்தான் பின்னாளில் திருமுருகக் கிருபானந்த வாரியார் சுவாமிகள் எனப் புகழ் பெற்றார். சுவாமிகள் கூறியபடி, சுமார் நாற்பது திருத்தலங்களுக்குத் திருப்பணிகளும் செய்தார்.

சுவாமிகளின் நெருங்கிய சீடரான இருளப்பக் கோனார், சுவாமிகளின் அறிவுரையின் படி திருக்கூடல் மலையில், தண்டாயுதபாணியின் சொரூபத்தைப் பிரதிஷ்டை செய்தார். இப்போது அங்கு பெரும் ஆலயம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. சுவாமிகளிடம் தீட்சை பெற்றுச் சீடர்கள் பலர் சித்தரானார்கள். கற்றங்குடி ரெட்டி சுவாமிகள், மூக்கையா சுவாமிகள், கச்சைகட்டி சுவாமிகள், வேலம்மாள், முத்துமாணிக்கம் சுவாமிகள், சோமப்பா சுவாமிகள், சாந்தானந்த சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

நீரின் மீது நடந்தது, தண்ணீரில் விளக் கேற்றியது போன்ற பல சித்துக்களைச் செய்த மாயாண்டி சுவாமிகள் 1928-ம் ஆண்டு புரட்டாசி மாதம் ஆறாம் தேதி, தமது பக்தர்களிடம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் அடக்கம் ஏற்படும் என்று தெரிவித்தார். அடக்கம் செய்ய வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டு, அங்கே சமாதிக் குழியும் வெட்டச் செய்தார் .

சுவாமிகள் கூறியபடி, 1930-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 11-ம் தேதி இரவு இருளப்பக் கோனாரின் இடது தோளில் சாய்ந்து “அப்பு இந்தச் சட்டையைக் கழற்றிவிடலாமா?” என்று கேட்டுவிட்டுச் சமாதியானார். சமாதிக் குழிக்குள் சுவாமிகளின் பூத உடலை வைக்கும்போது அவரது ஜீவநாடி ஓடிக்கொண்டிருந்ததாம். சுவாமிகளின் விருப்பப்படி, அவரது சமாதிப் பீடத்தில் சுவாமிகள் பூசித்துவந்த விநாயகரின் சொரூபம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திருக்கூடல் மலை என்ற காகபுஜண்டர் மலையில் காகபுஜண்டர் இன்றும் அரூபமாக யோக சமாதியில் இருக்கின்றார் என்றும், அங்கு பல சித்தர்கள் அரூபமாக வாழ்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது . இப்படிப்பட்ட புனிதமான அந்த மலையின் அடிவாரத்தில் மாயாண்டி சுவாமிகள் ஜீவசமாதியடைந்து அதனை மேலும் புனிதமாக்கி இருக்கிறார்.

அதென்ன சூட்டுக்கோல்? இவர் கையில் வைத்திருக்கும் சூட்டுக்கோல் நல்லவர்களுக்கு நன்மை தருவதாகவும், தீயவர்களுக்குத் தண்டனை தருவதாகவும் இருந்தது. ராமலிங்க சுவாமிகளின் காலத்துக்குப் பிறகு இந்த சூட்டுக்கோல் அவரின் சீடரான செல்லப்ப

சுவாமிகளிடமும் அதன் பின் அவருடைய சீடரான மாயாண்டி சுவாமிகளிடமும் வந்தது. இன்றைக்கும் இந்தச் சூட்டுக்கோலை மாயாண்டி சுவாமிகளின் சமாதியில் தரிசிக்கலாம்.

மதுரை திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரி நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டு, அங்கிருந்து பத்து நிமிடங்கள் நடந்தால், காகபுசுண்டர் மலை வந்து விடும். இங்கு தான் கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மற்றும் சோமப்ப சுவாமிகள் ஜீவ சமாதி அமைந்துள்ளது.

## வாழும் சித்தர்கள் — *Living Siddhars*

### வாழும் சித்தர் தெய்வ சிகாமணி (எ) ஒத்த ரூபா சித்தர்

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள சட்ட மன்ற விடுதி வளாகத்தின் அருகே அருள்மிகு ஸ்ரீ நாகத்தம்மன் ஆலயம் அருகே ஒரு சிறிய தகர குடில் அமைத்து வருவோருக்கெல்லாம் ஒரு ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு உங்களுடைய எதிர்காலத்தையும் ஆசீர்வாதத்தையும் வழங்கிக்கொண்டு இருக்கிறார். கூகிள் மேப் விபரங்கள் அறிய www.siddhargalthiruvadi.com என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




### முக்கிய அறிவிப்பு

வரும் ஜூலை மாதம் முதல் “சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் - செய்தி மலர்” 12 பக்கங்கள் கொண்ட மாத இதழாக தொடர்ந்து வெளிவரும் என்பதினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஜூன் மாதம் 1-15, 2024 சித்தர்கள் குரு பூஜை நாள் அட்டவணை**

| தேதி | சித்தர்களின் பெயர் | இடம் / மாவட்டம் | குரு பூஜை விவரம் |
|---|---|---|---|
| 01.06.2024 | ஆறுமுக சாமி சித்தர் | உறையூர், திருச்சி | மகா குரு பூஜை |
| 01.06.2024 | ஜகநாத சுவாமிகள் | மாலந்தூர், புதுக்கோட்டை | 3வது குரு பூஜை |
| 02.06.2024 | பரபரதேசி சுவாமிகள் | வள்ளியூர், தென்காசி | 8வது குரு பூஜை |
| 03.06.2024 | காசி சுவாமிகள் | திருச்செந்தூர், தூத்துக்குடி | மகா குரு பூஜை |
| 04.06.2024 | மகா சித்தர் போகர் | பழனி, திண்டுக்கல் | ஜெயந்தி விழா |
| 04.06.2024 | சக்தி சுவாமிகள் | கர்சேரி, மதுரை | 10வது குரு பூஜை |
| 04.06.2024 | சாது அருளானந்த சித்தர் | வாலாஜாபாத் வேலூர் | 25வது குருபூஜை |
| 04.06.2024 | வீராசாமி சுவாமிகள் | திருக்கச்சூர், செங்கல்பட்டு | 24வது குரு பூஜை |
| 07.06.2024 | மூட்டை சுவாமிகள் | திருப்பரங்குன்றம், மதுரை | 74வது குரு பூஜை |
| 07.06.2024 | ரமணகிரி சுவாமிகள் | குட்லாடம்பட்டி, மதுரை | 69வது குரு பூஜை |
| 07.06.2024 | உஜ்ஜி சுவாமிகள் | அருப்புக்கோட்டை | மகா குரு பூஜை |
| 08.06.2024 | ஆறுமுக சுவாமிகள் | திருசெந்தூர், தூத்துக்குடி | மகா குரு பூஜை |
| 10.06.2024 | பரமஹம்ஸ ஓங்கார சுவாமி | கோடம்பாக்கம், சென்னை | 103வது குரு பூஜை |
| 10.06.2024 | சிதம்பர சுவாமிகள் | வல்லநாடு, தூதுக்குடி | 43வது குரு பூஜை |

# விளம்பரங்கள்







## மகான்களின் மார்க்கம்

சித்தர்கள் பிரபஞ்சம், சித்தர் ஜீவன், ஜி.எஸ்.டிராவல்ஸ், சித்தர்ஸ் டாட் காம் இணைந்து நடத்தும்

**மகான்களின் மார்க்கம் ஆன்மீகப் பயணக் குழு**

சித்தர்கள் / மகான்களின் சமாதி ஆலயங்கள்

## சென்னை – காங்கேயநல்லூர்

**ஒரு நாள் பயணம் - வேலூர் 3ம் பாகம்**

இந்த பயணத்தில் தரிசிக்க இருக்கும் அனைத்து கோயில்களும் இதுவரை நமது பயணத்தில் தரிசிக்காத கோயில்கள்.

| புறப்படும் நாள் | புறப்படும் நேரம் | புறப்படும் இடம் |
|---|---|---|
| 23-06-2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 6:00 மணிக்கு | கோயம்பேடு<br>தலைமை தேர்தல் ஆணையம், சென்னை புறநகர் பேருந்து நிலையம் எதிரில். |

- ✓ சொந்த வாகனத்தில் வருபவர்களுக்கு எந்தவிதக் கட்டணமும் கிடையாது.
- ✓ சொந்த வாகனத்தில் வருபவர்களின் கவனத்திற்கு - இந்த பயணத்தின் மொத்த தூரம் 350 கிமீ.
- ✓ நாங்கள் ஏற்பாடு செய்யும் வாகனங்களில் வருவதற்கு கட்டணம் ரூபாய் 900/- (வாகனத்திற்கு மட்டும்).
- ✓ கட்டணம் செலுத்தும் வரிசைப்படி இருக்கைகள் ஒதுக்கப்படும்.
- ✓ கட்டணம் செலுத்தினால் மட்டுமே இருக்கைகள் முன்பதிவு செய்யப்படும்.
- ✓ கட்டணம் செலுத்திய பிறகு உங்கள் பயணத்தை ரத்து செய்தால் கட்டணத்தை திரும்ப பெற முடியாது.

பயணத்தில் கலந்து கொள்ள விரும்புவர்கள், 21-06-2024 தேதிக்குள்,
குறிப்பிட்டுள்ள தொகையை கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் செலுத்தி,
தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ளவும்.

*M. Muthu Maheswaran, # 20000574339, State Bank of India, Ifsc SBIN0001444, Kodambakkam, GPay – 9840411176*

**பயணத்தில் கலந்து கொள்ள**

**9840411176, 9941009897**

என்கிற எண்களில் தொடர்பு கொள்ளவும்




ஸ்ரீ கமலா அச்சகம், உப்புக்காரத் தெரு, குடந்தை. 9003428388

# பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் - பாகம் 4



## சுவாமிகளின் ஜீவ சமாதி

சுவாமிகள் பாடகச்சேரி கிராமத்தில் முருகன் கோவிலும், பெங்களூர் நகரத்பேட்டையில் சிவாலயமும், புதிதாக நிர்மாணம் செய்துள்ளார். சுவாமிகளின் முழு அளவு வெண்கலச் சிலை இங்கு உள்ளது. தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், தஞ்சை கீழவாசல் வெள்ளை விநாயகர் கோவில், சென்னை கிண்டி முனீஸ்வரன் போன்ற இடங்களில் எல்லாம் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. அனைத்து இடங்களிலும் சுவாமிகளின் திரு உருவச் சிலைகள் உள்ளன.

சுவாமிகள் அவ்வப்போது பல ஊர்களிலும் அன்னதானங்கள் ஏற்பாடு செய்வார். வடை, பாயாசம், 3 அல்லது 4 வகை காய்கறிகள், பருப்பு உணவு இருக்கும். பிரமிக்கும் வகையில் பிரம்மாண்டமான அன்னதானங்களையும் நடத்தியுள்ளார். 1929 ஆம் ஆண்டு கும்பகோணம் நாகேஸ்வரன் கோவில் கும்பாபிஷேகத்தின் போதும், 1920 மற்றும் 1932 மகாமகத்தின் போதும் நடந்த அன்னதானங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. தலா ஒரு லட்சம் பேருக்கு மேல் கலந்து கொண்டிருக்கிறார்கள். நான்கு திசைகளில் இருந்தும் மலை போல் உணவுப் பொருட்கள் சாரை சாரையாக வந்து இறங்கும். சமையல்காரர்கள் நூற்றுக்கணக்கில் இருப்பார்கள். சுவாமிகளின் சொல்லுக்கு கட்டுப்பட்டு இவை அனைத்தும் சர்வ சாதாரணமாக நடந்தன என்பதிலிருந்து இம் மகானின் சக்தி, மகத்துவம், மகிமைகளை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இரவும் பகலும் ஓயாது இறைபணியில் ஈடுபட்டு வந்த சுவாமிகளின் உடல்நிலை 1948 ஆம் ஆண்டு மோசமடைந்திருந்தது. சாமிகள் தன் பக்தர்களுக்கு எழுதிய கடிதங்களில் இருந்து இதனை அறிய முடிகிறது. தன் இறுதி நாட்களில் பெங்களூரில் வசித்து வந்த தன் தீவிர பக்தர் சாமன்னாவின் இல்லத்தில் சுவாமிகள் தங்கி இருந்தார். பிறகு சென்னை வந்தடைந்து திருவெற்றியூரில் 1949 ஆம் ஆண்டு ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமையில் ஜீவசமாதி அடைந்தார். அங்கு அவருக்கு சமாதி கோவில் உள்ளது.

பல இடங்களில் வடலூர் வள்ளலார் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளுக்கும் மற்றும் ஒத்த கருத்து ஒற்றுமை இருப்பதை காண முடிகிறது. பாடகச்சேரி சுவாமிகள் உயில் ஆவணங்களில் இவர் குறிப்பிட்டு உள்ளார். இவர் வள்ளலாரின் மறு அவதாரம் என்றும் கருது கின்றனர்.

## பைரவ பூஜை

சுவாமிகள் நடத்திய இந்த பைரவ பூஜை புதுமையானதும், தென்னிந்தியாவில் இதுவரை கண்டிராததும் ஆகும். வடை பாயாசத்துடன் நூற்றுக்கணக்கான இலைகளில் விருந்து பரிமாற சொல்லுவார். சுவாமிகள் சற்று நேரம் வெளியில் சென்று பிறகு குரல் கொடுத்தவுடன் நூற்றுக்கணக்கான பைரவர்கள் என்ற நாய்கள் எங்கிருந்தோ திடீரென்று திரண்டு வரும். அவர் கட்டளைகளுக்கு ஏற்ப குளத்தில் மூழ்கி அமைதியாக தனித்தனி இலைகளில் சாப்பிட்டு அவரது வந்தனத்தை ஏற்றுக் கொண்டு நொடியில் மாயமாய் மறைந்து சென்று விடும். போட்ட இலைகளின் எண்ணிக்கையும் வந்த நாய்களின் எண்ணிக்கையும் கூடவும் குறையவும் செய்யாது.

இவர் நடத்திய பைரவ பூஜைகளில் ஏராளமான முறை பக்தர்கள் கண்கூடாக கண்ட காட்சி இது. நாகேஸ்வரன் கோவில் திருப்பணியின் போது தினக்கூலி கொடுக்க உண்டியல் வசூலில் பற்றாக்குறை ஏற்பட்டபோது மண்ணை எடுத்துக் கொடுக்க, அது சரியான கூலித்தொகையாக பெறுபவர் கைகளில் மாறிய விந்தையான செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. நமக்கு இதற்கு முன் புல், புழு, பூச்சி, பறவை, விலங்கு என்ற வரிசையில் இறுதியில் மனித பிறவி கிட்டுகிறது. இனிய ஆத்மாக்கள் மட்டுமே தெரு நாய்களாக பிறவி எடுக்கிறார்கள். செய்த சிறு பிழைகளுக்கு கடன் தீர்க்கும் வகையில் 10லிருந்து 12 வருடங்கள் வரை இந்த பைரவர் என்கிற நாயின் வாழ்க்கை அமைந்திருக்கிறது.

மேலும் சித்தர்களின் விரிவான தகவல்களுக்கு www.siddhargalthiruvadi.com என்ற இணைய தளத்தில் தேடவும்.

## அறக்கட்டளையின் ஆன்மீகப் பணிகள்



### இலவச குடிநீர் மற்றும் அன்னதானம்

*கடந்த மே மாதம் 15ந்தேதி சனிக்கிழமை சென்னை வேளச்சேரியில் இருந்து தாம்பரம் வரையில் சாலையோரங்களில் வாழும் ஆதரவற்றவர்கள், வாழ வழியற்றவர்கள் மற்றும் ஊனமுற்றோர்கள் என சுமார் 200 பேர்களுக்கும் மேலானவர்களுக்கு ஒரு வேளை மதியஉணவு மற்றும் குடிநீரோடு அன்னதானம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 16ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 15 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ வீதம் சமையல் அரிசி வழங்கப்பட்டது.*

*சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக இந்த கோடை வெயிலுக்கு இதமாக சுத்தமான குடிநீர், குளிர் மோர் மற்றும் ஏழைகளுக்கு அன்னதானத்தை மனிதாபிமானத்தோடு கடந்த மே 1ந்தேதி முதல் சென்னை பள்ளிக்கரணையில் ஒரு பந்தல் அமைத்து மக்களுக்கு இந்த சேவை தொடங்கபட்டுள்ளது. நீங்களும் இந்த இலவச குடிநீர் மற்றும் அன்னதானத்திற்க்கு நன்கொடை வழங்கி இறையருளை “ஏழையின் சிரிப்பில்” பெற்றுய்ய அறக்கட்டளையின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

## இம்மாத நன்கொடையாளர்கள்

| எண் | பெயர் | இடம் |
|---|---|---|
| 1 | திரு. பத்மநாராயணன் ஆராவமுதன் | பெங்களூரு |
| 2 | திரு. இளவழகன் இராஜேந்திரன் | சென்னை |
| 3 | திரு. TJ. விஸ்வநாதன் | சென்னை |
| 4 | அஞ்சனா ராமசுவாமி | சென்னை |

## நன்கொடை விபரம்

| | |
|---|---|
| ஒருவருக்கு ஒருவேளை உணவு | **Rs. 80.00** |
| ஒரு குடிநீர் பாட்டில் | **Rs. 20.00** |
| பூஜை எண்ணெய் 1 லி | **Rs. 200.00** |
| ஒருமாத பூஜை சாமான்கள் | **Rs. 500.00** |
| ஒரு செங்கல் விலை | **Rs. 30.00** |
| ஒரு மூட்டை சிமெண்ட் விலை | **Rs. 450.00** |

## சித்தர் பாடல்கள்

**நித்திய வத்துவை நீங்காது**
**நாடினால் முத்திதான்**
**சித்திக்குமே குதம்பாய்**
**முத்திதான் சித்திக்குமே...**

**பேசறு நாற்றம் பெருகும்**
**உடலுக்கு வாசனை எதுக்கடி**
**குதம்பாய்...**

## தகவல் பலகை

### வெள்ளியங்கிரி மலைப் பயணம்....

*கடந்த சில நாட்களாக வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக 5,6,7 வது மலையில் அடிக்கடி கால நிலை மாற்றம் ஏற்பட்டு காற்றுடன் கூடிய மழை பெய்வதால் அங்கு கடும் குளிர்ச்சியான கால நிலை தொடர்ந்து நிலவி வருகிறது.*

*வெள்ளியங்கிரி மலையில் நேற்று சுமார்-2 மணி நேரத்துக்கும் மேல் தொடர்ந்து பலத்த மழை பெய்ததால் அங்கு நடந்து செல்லும் பாதைகள் அனைத்தும் சிதலமடைந்து உள்ளன.*

*தொடர்ந்து வெள்ளியங்கிரி மலையில் கால நிலை மாற்றம் காரணமாக அடிக்கடி அங்கு கடும் குளிர்ச்சியாக இருப்பதாலும் வெள்ளியங்கிரி மலை ஏருவதற்க்கு பக்தர்கள் யாரும் வர வேண்டாம் என வனத்துறையினர் தெரிவித்து உள்ளனர்.*

# சிவாலயத்திற்க்கு பூமிதானம் செய்யுங்கள்

தமிழக்கத்தில் உள்ள ஏனைய கோவில்களின் கல்வெட்டுக்களை நீங்கள் படித்தீர்களானால் அந்தந்த கோவில்களின் நீண்ட வரலாறு புரியும். தமிழகத்தை ஆண்ட சேர சோழ பாண்டிய வம்சாவழி முடி சூடா மன்னர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் செய்த அறப்பணிகளை கல்வெட்டுக்களின் மூலம் இந்த உலகிற்க்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் செய்த தான -தர்ம காரியங்கள் யாவும் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவை.


இவர்கள் பொன் தானம், மண் தானம், அன்னதானம், கோதானம் கோவிலுக்கு பொருள் தானம் இப்படி தானங்களை வாரி வழங்கி வரலாற்றில் நீங்கா இடம்பெற்றனர். அவர்களின் ஆன்மாக்களும் இறைவனடி சேர்ந்து வீடுபேறு பெற்றனர்.

மன்னர்களுக்கு இணையாக குடிமக்களும் கோவிலுக்கு தேவையான பொருட்களை தானமாக தந்து இறைவனின் அருட்கடாசத்தினை பெற்றனர். இவ்வாறு கொடுக்கும் தானத்தின் மூலம் தனது ஏழு பிறவிகளிலும் செய்த மகாபாவங்களும் மற்றும் தனது குடும்பத்தாரின் பாவங்களிலிருந்தும் ஒருசேர விமோசனத்தை பெற்றுவந்தனர்.

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக நிர்மாணிக்க உள்ள மிகப்பெரிய சிவாலயம் மற்றும் *18* சித்தர் பீடங்கள் கொண்ட திருக்கோவிலின் புண்ணிய பூமியை வாங்குவதற்க்கு தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறது. கடந்த *2* மாதங்களாக கோவில்களின் நகரமாம் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் பகுதிகளில் கோவிலுக்கான இடம் தேர்வு செய்யபட்டுள்ளது. அறக்கட்டளையின் ஒவ்வொரு நன்கொடையாளரும் தங்களால் இயன்ற அளவு பொருளாதாரத்தின் அடிப்படையில் நிலத்தின் அளவிற்க்கான தொகையை நன்கொடையாக அறக்கட்டளையின் வங்கிக்கணக்கிகிற்க்கு அனுப்பி வைக்கலாம். நீங்கள் அனுப்பும் நன்கொடைக்கு, *Income Tax Act rule 80G* -ன்படி வரிவிலக்கு உண்டு.

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி இந்த மிகப்பெரிய சிவாலயத்தை எழுப்ப முனைப்பெடுத்திட வேண்டும். மேலும், இந்த ஆலயம் எழுப்ப பூமி தானம் செய்த அனைத்து நன்கொடையாளர்களின் பெயரும் நீண்ட நெடிய கல்வெட்டின் மூலம் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு காலம் காலமாக அவர்களின் புகழ் ஓங்கி இருக்கவேண்டி சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக அதனை ஆலயத்தின் முகப்பில் பதிக்கப்படும்.

மேலும் ஆலயத்திற்கான "**பூமிதானம் நன்கொடை**" பற்றி அறிந்துகொள்ளவும் அல்லது உங்களுடைய நன்கொடையை அறக்கட்டளையின் *+91 8438238921* என்ற *G-Pay / PayTM* எண்ணிற்க்கு அனுப்பி வைக்கவும்.
தானம் செய்து ... பாவங்களை தீர்த்து ... பூர்வ புண்sணியத்தை அடைவீர் ...






*The proposed site is identified at Poovalai Village Near Arambakkam in Gummidipoondi Taluk, Thiruvallur District around 2.5 Acres of Land with small building for "Siddhargal Thiruvadi Seva Trust"*




**( You can get Income Tax Relief of your DONATION under 80G )**